Sri K. T. KOSALRAM: ரைஸ்-மில்லுக்கு லைசென்ஸ் கொடுப்பது சம்பந்தமாக, ஸ்தல ஸ்தாபன இலாகாவிலிருந்து லைசென்ஸ் பெற்றவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் கலெக்டர் ஆபீஸிலிருந்து லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதன் அடிப்படையில் தான் மனுக்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு வருகின்றது.

Sri A. SUBRAMANYAM: 5 அவுன்ஸ் கைக்குத்தல் அரிசி சாப்பிடுவது 10 அவுன்ஸ் மில் அரிசி சாப்பிடுவதற்குச் சமமாகும் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அது அவ்வளவு தூரத்திற்குச் சரியென்று சொல்ல முடியாது. மில் அரிசியைவிட கைக்குத்தல் அரிசி குறைவாகச் சாப்பிட்டால் போதுமானதாக இருக்கும்.

Sri K. T. KOSALRAM: இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, அரசாங்க உத்தரவுப்படி லைசென்ஸ் கொடுக்கப்படாமல் இருக்கும் மனுக்கள் (பெண்டிங் கேஸ்கள்) எல்லாம் அனுதாபத்தோடு கவனிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அம்மாதிரியெல்லாம் மனுக்கள் வரும்போது முதலில் கலெக்டர் முடிவு சொல்லுகிறார். அதன் பின்னால் ரெவின்யூ போர்டு பரிசீலனை செய்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறது. அதில் எங்கு நியாயம் இருக்கின்றதோ, அதன்பேரில் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கும்.

Men and women teachers trained in Teachers' Training Schools

* 56 Q.—Sri G. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of men and women teachers trained in Teachers' Training Schools in 1958 in the Higher Grade and the Secondary Grade classes;

(*b*) the number of Higher and Secondary Grade teachers employed by various schools in the State in June-July 1958; and

(*c*) whether there is any proposal before the Government to limit the number of seats in Training Schools from 1959–60?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) The information is not available. The number of candidates who underwent the training and passed the T.S.L.C. Examination in March 1958 is as follows :—

			Men.	Women.
Secondary Grade	..	..	**1,029**	**807**
Elementary Grade	..	..	**730**	**859**
Senior Basic	..	..	**2,290**	**717**
Junior Basic	..	..	**1,656**	**935**

(*b*) The information is not available. The time and labour involved in collecting the particulars to answer the question will not be commensurate with the public interest served.

(*c*) No, Sir.

[17th February 1959

SRI G. KRISHNAMOORTHY : Is it a fact that as per the figures of the Government themselves, we are just producing double the number of teachers required for substitution in the place of retired or dead persons?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, my impression also was that we were training more men than necessary. But the matter has been gone into and the Director of Public Instruction has furnished figures which go to show that all these persons could be absorbed. Particularly, when we were introducing the teacher-pupil ratio, there was some stagnation. But now, I am told that the position has considerably improved and that there is scope for employment for all.

SRI G. KRISHNAMOORTHY : Have the Government appointed a committee or are they going to appoint one to go into these affairs and find out whether we produce the limited number required for a year?

THE HON. SRI C. SUBRAMANIAM : The appointment of a committee is not necessary. The Director of Public Instruction has gone into the matter.

VIDWAN T. MUTHUKANNAPPAN : இவர்களில் எத்தனை பேர் ஆதாரப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள், சாதாரண ஆசிரியர்கள் எத்தனை பேர் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி நான் முதலில் குறிப்பிட்டேன். அதாவது மொத்தமாகப் பயிற்சி பெற்றவர்களின் தொகை :—

செகண்டரி கிரேடு—ஆண்கள் 1,029, பெண்கள் 807.

எலிமெண்டரி கிரேடு—ஆண்கள் 730, பெண்கள் 859.

ஸீனியர் பேஸிக்—ஆண்கள் 2,290, பெண்கள் 717.

ஜூனியர் பேஸிக்—ஆண்கள் 1,656, பெண்கள் 935.

3-20 p.m. SRI T. P. SRINIVASAVARADAN : Has it been the policy of the Government since 1957 not to give permission to start training institutions and if at all permission was given, was it given only to start Basic Training institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. No schools are allowed to be started, because we have started enough number of schools. Anyhow, during the Second Plan period, we are converting the existing non-basic schools into basic training schools. A few more remain to be so converted and by the end of the Second Plan period, they would also be convented.

SRI G. KRISHNAMOORTHY : Sir, will the Government appoint special staff in each district office to collect statistics of unemployed teachers so that there may be correct statistics available and we may assess correctly the requirement of each district or each area on the basis of such statistics?

17th February 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : We have got statistics to show how many new teachers are unemployed, how many have retired, etc. From them, it can be calculated how many would be required for each district every year. On that basis, it is found that it may not be necessary to restrict the number of trainees.

SRI T. P. SRINIVASAVARADAN : Is there any proposal to close down all the Higher Grade Training Schools and keep only the Secondary Grade Training institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. But it would be a slow process. There is unemployment amongst this category also and we do not want to create a problem. But by a planned process all the schools will become Secondary Grade Training Schools.

SRI K. T. KOSALRAM : ஸார், ஒரு குறிப்பிட்ட ஜில்லாவில், திருநெல்வேலி ஜில்லாவில், அதிகமான டிரெயினிங் ஸ்கூல்கள் இருப்பதனால், அங்கு ஆயிரக்கணக்கான பள்ளி உபாத்தியாயர்கள் டிரெய்னிங்கை முடித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதும், அதே நேரத்தில் சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்களில் டிரெய்னிங் ஆகாதவர்களை வேலையில் நியமித்திருக்கிறார்கள் என்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி இருக்குமானால், அங்குள்ள அன்டிரெயின்டு டீச்சர்களை எடுத்துவிட்டு, வேலை இல்லாமல் இருக்கும் 2,000 பேர்களுக்கு வேலை கொடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆயிரத்திலிருந்து இப்போது 2,000 ஆகியிருக்கிறது. இப்படியே எங்கு போய் நிற்கும் என்று தெரியவில்லை. திருநெல்வேலி ஜில்லாவில் அதிகமான ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அங்கு இருப்பவர்களுக்கும் இப்போது வேலை கிடைத்துவருகிறது என்று தெரிகிறது. ஒரு ஜில்லாவில் உள்ளவர்களை இன்னொரு ஜில்லாவில் வேலைக்கு நியமிப்பதில் சிரமங்கள் இருக்கின்றன.

SRI K. M. RAMASAMY GOUNDER : பயிற்சி பெற்ற ஆசிரியைகளில் அநேகம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் "பிரிபரென்ஸ்" கொடுத்து, காலி இடங்களில் பெண் ஆசிரியைகளை நியமிக்க சர்க்கார் ஒரு உத்திரவைப் பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம் கவனத்திற்கு வருகிற இரண்டு, மூன்று கேஸ்களை வைத்துக்கொண்டு அதிகமான பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்ததில், நான் நினைத்துப் பார்த்த அளவுக்குக் கூட வேலையில்லாமல் இல்லை என்று தெரியவருகிறது. ஆகையால், இதிலே ஆசிரியைகளுக்கு "பிரிபரென்ஸ்" கொடுக்க வேண்டுமென்பது எழவில்லை.

Provident Fund Accounts of teachers

* 57 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken or proposed to be taken by the Government to expedite the closure of Provident Fund Accounts of teachers in aided institutions on their retirement?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is laid on the table of the House.

---

[a] Printed as Appendix II on page 140 infra.